பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**07 01 2026** **6 45**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையிலான நட்புறவை வலுப்படுத்துவதில், லக்சம்பர்கின் பங்களிப்பு முக்கியமானது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

2. ரயில்வே துறை, கடந்த ஆண்டில் **4** ஆயிரத்து **838** ரயில் பெட்டிகளைத் தயாரித்து சாதனை படைத்துள்ளது.

3. மாணவர்களின் தனித் திறமையை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் ஊக்குவிக்க வேண்டும் என்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி கேட்டுக்கொண்டுள்ளார்.

4. காவிரியில் தமிழகத்திற்கு உரிய தண்ணீர் திறந்துவிடப்படுவதை உறுதி செய்யுமாறு காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

5. வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி, அடுத்த **24** மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையிலான நட்புறவை வலுப்படுத்துவதில், லக்சம்பர்கின் பங்களிப்பு முக்கியமானது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

லக்சம்பர்க் வெளியுறவு அமைச்சர் திரு. **Xavier Bettel** உடனான சந்திப்பின்போது, தொடக்க உரையாற்றிய அவர், இரு நாடுகளுக்கு இடையிலான உறவு, நீண்ட நெடிய பாரம்பரியம் கொண்டது என்று கூறினார். லக்சம்பர்க், இந்தியாவின் மிக முக்கிய நட்பு நாடு என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக அந்நாட்டு பிரதர் திரு. **Luc Frieden** உடன் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து, டாக்டர் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நிதிச் சேவைகள், முதலீடு, தொழில்நுட்பம் மற்றும் புதுமை கண்டுபிடிப்பு உள்ளிட்ட துறைகளில், இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து, ஆலோசித்ததாக கூறியுள்ளார்.

<<<<>>>>

ரயில்வே துறை, கடந்த ஆண்டில் **4** ஆயிரத்து **838** ரயில் பெட்டிகளைத் தயாரித்து சாதனை படைத்துள்ளதாக, ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், சாதாரண ரயில் பயணிகளின் நலனில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாகவே, குளிர்சாதன வசதி இல்லாத ரயில்களில் பயணம் செய்வதற்கான கட்டணம், மிகக் குறைந்த அளவில் உயர்த்தப்பட்டிருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், பயணியர் நலன் கருதி, சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதுடன், ரயில் நிலையத்தில் உள்ள வசதிகளையும் மேம்படுத்தி வருவதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

பயணியரின் பாதுகாப்பு மற்றும் ரயில் சேவைகளின் தரத்தை ஒட்டுமொத்தமாக மேம்படுத்தவும் உறுதி பூண்டிருப்பதாக, ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழக விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்பட உள்ள “இது நம்ம ஆட்டம்-**2026**” இளையோர் விளைபாட்டுப்

போட்டிகளுக்கான இணையதள முன்பதிவை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் சென்னையில் தொடங்கி வைத்தார்.

மாநிலம் முழுவதும் உள்ள **388** ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள **16** முதல் **35** வயதுடைய இளைஞர்கள் இதில் பங்கேற்கலாம்.

விளையாட்டு வீரர்கள் நேரடியாவோ, பள்ளி, கல்லூரி அல்லது சம்பந்தப்பட்ட ஊராட்சி வாயிலான முன்பதிவு செய்துகொள்ளலாம் என்றும் அரசு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூடுதல் விவரங்களுக்கு ஆடுகளம் தகவல் தொடர்பு மையத்தை தொலைபேசி வாயிலாக தொடர்புகொள்ளலாம் என்றும் மாநில அரசு கூறியுள்ளது.

<<<<>>>>

மாணவர்களின் தனித் திறமையை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் ஊக்குவிக்க வேண்டும் என்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி வலியுறுத்தியுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி அறிஞர் அண்ணா அரசுப் பள்ளியின் நூற்றாண்டு விழாவில் பேசிய அவர், ஒரு மாணவரின் திறமையை பிற மாணவர்களுடன் ஒப்பிடக்கூடாது என்று கேட்டுக்கொண்டார்.

மாணவர்கள் தங்களது இலக்குகளை நோக்கி முன்னேறிச் செல்ல வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாநிலத்தில் சுமார் 2 ஆயிரத்துக்கும் அதிகமான பள்ளிகள் நூற்றாண்டைக் கடந்து சிறப்பாக செயல்பட்டுக்கொண்டிருப்பதாகவும் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.

<<<<>>>>

காவிரியில் தமிழகத்திற்கு இம்மாதம் வழங்கப்பட வேண்டிய 2 புள்ளி ஏழு ஆறு டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிடப்படுவதை உறுதி செய்யுமாறு காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

புதுதில்லியில் ஆணையத்தின் தலைவர் திரு. எஸ்.கே. ஹல்தார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்ற தமிழக பிரதிநிகள், டிட்வா புயல் காரணமாக மாநிலத்தில் சுமார் ஒரு லட்சம் ஏக்கர் பரப்பிலான பயிர்கள் சேதமடைந்திருப்பதை சுட்டிக்காட்டினர்.

இப்பகுதியில் மறுநடவு மேற்கொள்ள போதிய தண்ணீர் தேவைப்படுவதாகவும் தமிழக பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டனர்.

<<<<>>>>

29-ஆவது தேசிய இளையோர் திருவிழாவையொட்டி நடைபெறவுள்ள வளர்ச்சியடைந்த இந்தியா குறித்த இளம் தலைவர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி பதிலளிக்க இருப்பதாக மை பாரத் அமைப்பின் தமிழ்நாடு புதுச்சேரி இயக்குனர் திரு செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இவ்வாறு கூறினார்.

**(Voice Byte - Senthil Kumar - 47 Sec)**

<<<<>>>>

பொங்கல் பண்டிகை நெருங்கி வரும் வேளையில் விழுப்புரத்தில் மண்பானைகள் உற்பத்தி சூடுபிடித்துள்ளது.

ஒரு பானை 50 ரூபாய் முதல் 300 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாக மண்பானை தயாரிப்பாளர் தெரிவித்துள்ளார்.

**(Voice Byte - தொழிலாளி - 23 Sec)**

<<<<>>>>

ராமேஸ்வரம் 100.9 மெகாஹெர்ட்ஸ் பண்பலை ஒலிபரப்பில் இன்று காலை 9 மணிமுதல், மதுரை பண்பலையின் நிகழ்ச்சிகள்

ஒலிபரப்பப்படும் என்று சென்னை அகில இந்திய வானொலி நிகழ்ச்சி பிரிவு தலைவர் கூறியுள்ளார்.

இதுவரை, ராமேஸ்வரம் பண்பலையில் சென்னை வானொலி நிலையத்தின் மத்திய அலைவரிசை நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகி வந்தன.

<<<<>>>>

ரயில் பயணிகள் தங்களது பயணத் தேவைக்கு "**Rail One**" செல்போன் செயலியைப் பயன்படுத்துமாறு தெற்கு ரயில்வே கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், முன்பதிவில்லா டிக்கெட், நடைமேடை மற்றும் முன்பதிவு டிக்கெட்டுகளை இந்த செயலி மூலம் பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் நோக்கில், முன்பதிவில்லா டிக்கெட்டுகளுக்கு **3** சதவீத கட்டண சலுகை அளிக்கப்படுவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

யு.பி.ஐ., டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு, ரயில்வே வேலட் மற்றும் நெட்பேங்கிங் சேவைகளைப் பயன்படுத்தி **Rail One** செயலி மூலம் டிக்கெட்டுகளைப் பெறலாம்.

அத்துடன் முன்பதிவு செய்த டிக்கெட்டுகளின் **PNR** நிலையையும் அறிந்துகொள்வதோடு, பயணிகளின் இருக்கைக்கே நேரடியாக உணவு வினியோகிக்கப்படுவதாகம் தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

வெனிசுலா மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை **56**ஆக அதிகரித்துள்ளது.

--------------

அமெரிக்க சமுக பாதுகாப்பு அமைப்பின் துணை ஆணையராக இந்திய வம்சாவளியை சேர்ந்த திரு. அர்ஜுன் மோடி பொறுப்பேற்றுள்ளார்.

--------------

மியான்மர் நாட்டில் ராணுவ நிர்வாகத்தால் நடத்தப்படும் தேர்தலில் பெருமளவு முறைகேடு நிகழ்ந்துள்தாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

--------------

உத்தரப்பிரதேச மாநிலம் காசியாபாதில் உள்ள மதுபான ஆலையில் நடைபெற்ற முறைகேடு தொடர்பாக அமலாக்கத்துறை நடத்திய சோதனையின் அடிப்படையில் அந்நிறுவனத்தின் இயக்குநர் கைது செய்யப்பட்டுள்ளார்.

--------------

விதிமுறைகளை சரியாக பின்பற்றாததன் காரணமாக ஜம்மு-கஷ்மீரின் Reasi-யில் மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்ட அனுமதியை தேசிய மருத்துவ ஆணையம் திரும்பப் பெற்றுள்ளது.

--------------

மும்பையில் பொங்கல் பண்டிகையின்போது நைலான் மாஞ்சா கயிறுகளின் உற்பத்தி, விற்பனை மற்றும் பயன்பாட்டிற்கு காவல்துறை தடை விதித்துள்ளது.

--------------

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ராஜகோபாலசுவாமி கோயிலில், திருமங்கை மன்னன் பெருமாளிடம் நகை பறிக்கும் வேடுபறி உற்சவம் நடைபெற்றது.

--------------

தமிழக சட்டப்பேரவை உறுதிமொழிக் குழுவின் பரிந்துரைகளை அதிகாரிகள் உரிய காலத்திற்குள் நிறைவேற்ற வெண்டும் என்று குழுவின் தலைவர் திரு. வேல்முருகன் அறிவுறுத்தியுள்ளார்.

--------------

அரசுப் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கான தமிழக முதலமைச்சரின் திறமை தேடல் தேர்வுக்கான விண்ணப்பங்களை தலைமை ஆசிரியர்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கான அவகாசம் நாளை மறுநாள் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

--------------

சென்னை மாநகராட்சியில் பட்ஜெட் அறிவிப்புகளின் செயலாக்கம் குறித்த ஆய்வுக் கூட்டம் மேயர் திருமதி பிரியா தலைமையில் நடைபெற்றது.

--------------

வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி, அடுத்த 24 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது அதே திசையில் நகர்ந்து அதற்கடுத்த 48 மணி நேரத்தில் தென்மேற்கு வங்கக் கடல் பகுதியை நோக்கி நகரக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே குமரிக் கடல் மற்றும் லட்சத்தீவு பகுதியில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கடலோர தமிழகத்தின் ஓரிரு இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<The End>>>>**